www.apscheduler.com



14.07.2026
OS. No.**62/2018**
**பி.வா.சா.1 –** திரு.மேகராஜன் த/பெ. பெரியசாமி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு பற்றிய விபரமும் தான செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லக்கூடிய விபரமும் எனக்குத் தெரியும். அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் எனது அப்பாவிற்கு 83 வயது நடைபெற்றது. என் அப்பாவுக்கு சுகர் நோய் இருந்தது. அது நார்மல் சுகர் ஆகும். அந்த ஆவணத்தை ஏற்படுத்தி வைப்பதற்கு முன்பாக என் அப்பா என்னை அழைத்து இவ்வாறு ஆவணம் ஏற்படுத்தி வைக்க போகிறேன் என்று தெரிவித்தார். இந்த ஆவணம் ஏற்படுத்தி வைக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி 10.05.2013 ஆகும். என் அப்பா ஆவணம் ஏற்படுத்தி வைக்கப் போவதாக இரண்டு நாட்களுக்கு முன்பாக கூறினார். செட்டில்மெண்ட் என சொல்லப்படும் ஆவணம் தவிர என் தகப்பனார் உயில் ஆவணம் எதுவும் எழுதி வைத்திருக்கிறாரா என்று எனக்குத் தெரியாது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உயில் ஆவணம் பற்றி சொல்லப்பட்ட விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பி.வா.சா.ஆ.1-ல் பக்கம் 8-ல் அயிட்டம் 3-ல் மீதி உள்ள சொத்துக்கள் உயிலுக்கு கட்டுப்பட்டதுமான என்ற வாசகம் இருக்கிறது என்றால் சரிதான். என் அப்பாவிடம் நான் உயில் பற்றி எதுவும் கேட்கவில்லை. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்கப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் லோகநாதன் வீட்டில் வசிக்கவில்லை வெளியில் இருந்தார். செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டதாக சொல்லும் போது நானும், எனது சகோதரர்களும் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் இருந்தோம். அந்த ஆவணம் பதியும் போது என் அப்பாவின் முகவரியை காண்பிப்பதற்கு ரேஷன் கார்டு காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ரேஷன் கார்டில் லோகநாதன் பெயரும் சேர்ந்து இருக்கிறது. என் அப்பா ரேசன் கார்டில் இருந்து லோகநாதனின் பெயரை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டு இருந்தால் பெயர் நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் பிரச்சனை நடந்தது. பெயர் நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தாரா என்று எனக்கு தெரியவில்லை. பொதுவாக செட்டில்மெண்ட் பத்திரம் அல்லது உயில் பத்திரம் எழுதும்போது எழுதக் கூடிய நபர் தனக்கு யாரெல்லாம் வாரிசுகள் என்பதையும் எதற்காக தான் மற்ற வாரிசுகளுக்கு சொத்துக்கள் கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தையும் குறிப்பிட்டு எழுதுவார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1–ல் மற்ற வாரிசுகள் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுடன் எனக்குப் பிரச்சனை இருக்கிறது என்று குறிப்பிட்டு அதனால் அவர்களுக்கு நான் சொத்துக்கள் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு என் தகப்பனார் சொல்லியிருக்கிறாரா என்றால் இல்லை. முத்திரைத்தாள் ஆவணத்தை எப்போது என் தகப்பனார் வாங்கினார் என்று என்னிடம் தெரிவிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1–ல் முதல் தாளில் முத்திரைத்தாள் வாங்கப்பட்ட தேதி 03.05.2013 என்று கண்டிருக்கிறது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு நல்ல மனநிலை மற்றும் உடல் நிலையில் இருந்திருந்தால் சரியான முகவரியை குறிப்பிட்டு இருந்திருப்பார் என்றால் சரியான முகவரியைத்தான் குறிப்பிட்டு இருக்கிறார். நல்ல மனநிலையிலும், உடல் நிலையிலும் இருந்தார். பி.வா.சா.ஆ.1–ல் கதவு எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு பி.வா.சா.ஆ.1–ல் சொல்லப்பட்ட உயில் ஆவணம் பற்றி நன்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1–ல் என் தகப்பனார் பெயருக்குப் பின்னால் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண்.9443179664 என்பது என்னுடைய அலைபேசி எண் ஆகும். பி.வா.சா.ஆ.1– ஆவணத்தின் மூல ஆவணங்கள் என்வசம் என் அப்பாவால் ஒப்படைக்கப்பட்டது என்று கூறுகிறேன். செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்த பிறகு அந்த ஆவணங்களை என் தகப்பனார் என்னிடம் கொடுத்தார். அசல் ஆவணங்களை என்னிடம் கொடுத்ததாக குறிப்பிட்டு இருந்தால் செட்டில்மெண்ட் ஆவணத்திலும் அதைக் குறிப்பிட்டு இருப்பார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1–ல் அவ்வாறான வாசகம் எதுவுமில்லை என்றால் சரிதான். ஒரு ஆவணத்தில் நான்கு இலக்கச் சொத்துக்களை குறிப்பிட்டால் அந்த நான்கு

VerdictumIn

சொத்துக்களின் மொத்த மதிப்பையும் குறிப்பிடுவதும், அதன் மொத்த பரப்பளவையும் குறிப்பிடுவதும் வழக்கம் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது நடைபெற்ற நிகழ்வுகள் அனைத்தும் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அப்போது என் தகப்பனார் கையில் எதுவும் எழுதவில்லை. என் தகப்பனார் அந்த ஆவணத்தில் கையொப்பம் மட்டும் செய்தார். என் தகப்பனார் அந்த ஆவணத்தில் கையெழுத்துத் தவிர வேறு எதுவும் எழுதவில்லை. பி.வா.சா.ஆ.1–ல் 9–வது தாளில் நான்கு அயிட்ட சொத்துக்களின் கூடுதல் மதிப்பு என்ற வாசகம் கைப்பட எழுதப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். நான் சொல்வது போல் என் தகப்பனார் எந்த ஒரு செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு என் தகப்பனார் உண்மையிலேயே செட்டில்மெண்ட் எழுதி வைத்திருந்தால் தனது வாரிசுகள் குறித்த அனைத்து விவரங்களையும் தெரிவித்திருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)

**மறுவிசாரணை:–** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.),XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.